உ

சிவமயம்

ஸ்ரீசுயம்பிரகாசசுவாமிகள்பரம்பரையில்

திருவையாற்றிலெழுந்தருளிய

சிவாநந்தசுவாமிகள்

பஞ்சரத்தினம், அருளிறைப்பத்து, தோத்திரமாலை.

இவைமூன்றும்

அரவக்குறிச்சியென்று வழங்குகிற

விஜயநகரம்

ம-ா-ா-ஸ்ரீ சரவணமுதலியாரவர்கள்-குமாரர்

தெய்வராயமுதலியாரவர்கள்

வேண்டுகோளின்படிக்கு

ஷை சுவாமிகள் மாணாக்கருளொருவராகிய

கருவூரைச்சார்ந்த நல்லமாகாளிப்பட்டி

சு-தெய்வசிகாமணிக்குருக்களவர்களால்

இயற்றப்பட்டு.

ஷை தெய்வராயமுதலியாரவர்களால்

சதாவதானம்

சுப்பிரமணியஐயரவர்களது

சென்னபட்டணம்.

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

சாலியவாகன௵-௧௮௦௩-ல் நிகழ்கின்ற-விக்கிரம௵

துலாரவி.

உ

சிவமயம்.

திருவையாறு

சிவாநந்தசுவாமிகள்

பஞ்சரத்தினம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

மாதவர்சூ ழையாற்றின் மன்னுஞ் சிவாநந்த
நாதனுக்கோர் பஞ்சரத்தினஞ்சொலவொண்—மாதிகிரிக்
கையானனத்திறையோன் காணறியா னின்றபுழைக்
கையானனத்திறையோன் காப்பு.

நூல்.

ஆசிரியவிருத்தம்.

திருவிளங் கமலவரு ளொருவாது மருவிச்
சிறந்துலவு மிருவிழிகளுஞ்
சிட்டரிதை யக்குமுத மலரவரு மெஞ்ஞான
தேசொளிரு மதிவதனமும்
வெருவிடுங் காலனுக் கஞ்சே லெனத்திடம்
விளக்கவரு மபயகரமும்

விமலசிற் சுகவுருவ நம்முரு வெனக்காட்டும்
வெண்பொடிகொள் திருமேனியுங்
கருவிடை யழுத்தவடி யார்சே கரத்திலெண்
கண்ணன்வனை தருமெழுத்தைக்
கடிதிற் றுடைக்குநின் னுபயபா தங்களுங்
கருதியா னுய்யவருள்வாய்
நிருவிகற் பம்பெருகு முனிவோர் கணஞ்சூழு
நிதிமேவு பஞ்சநதிவாழ்
நித்தமறை யோதந்த அத்தனுரு வாய்வந்த
நித்தியசி வாநந்தனே. (க)

எத்தலஞ் சுற்றிடினு மெத்தவம் பெற்றிடினு
மெக்கலைக ளுங்கற்கினும்
இனியோர் பவத்துறு நிருவாண நிலையுறற்
கேதுமெஞ் ஞானமிஃதைச்
சித்தமுற வோர்ந்தனுப விப்பதற் கேதுநின்
றிருவருட் பிரசாதமாஞ்
செப்புமத் திருவருள் பெறற்கேது நின்பதந்
தினமுந் துதித்தலாமென்
றித்தலத் துண்மையோ டகந்துணிந் துன்பாத
மேத்துமடி யேற்கிரங்காய்
இணையோத வறியாத குணாதீத பரபோத
வின்பவுரு வானநாத
நித்திலந் தவழ்தண் புனற்பொன்னி சூழ்சங்க
நிதிமேவுபஞ்ச நதிவாழ்

நித்தமறை யோதந்த அத்தனுரு வாய்வந்த
நித்தியசி வாநந்தனே. (உ)

மேதினியி லிக்காய மிறவாத வரமுமினி
மேற்றேன்று றுதவரமும்
வேண்டிலே னின்னடிக் கன்போடு தத்தமென
வித்தமுட லாவியீந்து
போதநிலை பெற்றவடி யாரடிக் கேவலெப்
போதுமா றுதியற்றும்
புண்யசன் மார்க்கமாம் வரமொன் றளித்தியேற்
போதுநா னுய்வதற்குச்
சோதிமய மாகிய சதாநந்த பூரண
சுயம்புவென் றனவரதமுந்
துதிநேய ரகமேய வதிதூய வடிவாய
சொல்லரிய வப்ரமேய
நீதிவழு வாதுபுரி மறையோர் குழாமருவு
நிதிமேவு பஞ்சநதிவாழ்
நித்தமறை யோதந்த அத்தனுரு வாய்வந்த
நித்தியசி வாநந்தனே. (௩)

அகிலமிசை யறைதலுறு மெழுவகைச் சனனத்து
ளரிதுமா னுடதேகமீ
தழிவுறு முன்னர்விட வேண்டுவன வற்றைவிட்
டறியவேண் டியவஸ்துவைச்
சகலசங் கற்பங்க ளறவோர்ந்து நிற்பதே
சன்மார்க்க நீதியென்னச்
சாற்றுமறி ஞோர்மொழியி னிற்கவென் றுன்மனஞ்
சற்றேய்வ திலையென்செய்வேன்

இகலறு விவாதசுட ரெனநின் றுனடியிணையை
எஞ்ஞான்று மேத்தவருள்வாய்
இயலொத்த நயமுத்த ரிதையத்த பரிசுத்த
ஏகபோகாத்மசித்த
நிகிலமா யல்லவாய் நின்றிலகு மூர்த்தியே
நிதிமேவு பஞ்சநதிவாழ்
நித்தமறை யோதந்த அத்தனுரு வாய்வந்த
நித்தியசி வாநந்தனே. (௪)

காமமத மாச்சரிய மீரிசை யருமையயாங்
காரமுத லானதீய
கணமாம் பதாதியுட னஞ்ஞான மென்னுமத
கரியேறு மோகவேந்தாம்
ஏமமறு மேவலனை வெற்றிகொண் டெஞ்ஞான்று
மேகசக் ராதிபதியாய்
ஏழாநிலத்தினிடை மேலானஞானமாம்
எழின்மேவு துவசநாட்டிச்
சேமமுறு நித்யபரிபூரணப் பாவையொடு
சிந்தையுற வாழவருள்வாய்
தேவரா யாநிரா காரியாதூரியா
சிட்டருக் கருளாரியா
நேமமொடு நான்குவரு ணத்தரு மூவந்துதொழு
நிதிமேவு பஞ்சநதிவாழ்
நித்தமறை யோதந்த அத்தனுரு வாய்வந்த
நித்தியசி வாநந்தனே. (௫)

பஞ்சரத்தினம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

அருளிறைப்பத்து.

இரட்டைக்குறள் வெண்செந்துறை.

அருந்தவர்கள் விருந்தரித மடிபரவு மிறைவன்
அஷ்டவித வியல்புடைத்தா யமர்ந்திருக்கு மிறைவன்
இருந்தபடி யேயிருக்க வெனக்கருளு மிறைவன்
இவ்விதமென் றியம்பவொணா வெழில்வடிவத் திறைவன். (௧)

அன்பரிதை யத்தவிசி லமர்ந்தொளிரு மிறைவன்
ஐந்தொழிலுஞ் செய்துலகை யாட்டிவைக்கு மிறைவன்
என்படிறை யோர்மொழியா லெடுத்தெறியு மிறைவன்
இருப்பதுவாய்த் தோற்றுவதா யின்பமுமா மிறைவன். (௨)

ஆதிநடு வீறிலதா யற்புதமா மிறைவன்
அணைநொடியி லகிலமழித் தாக்குமரு ளிறைவன்
வாதமித்தை தன்மபலமூ வகைநயனத் திறைவன்
வாக்குமனத் தான்மதியா வண்மையுறு மிறைவன். (௩)

தஞ்சமென்றே யடைந்தவரைத் தன்மயஞ்செய் யிறைவன்
சகளமொடு நிஷ்களமாய்த் தான்விளங்கு மிறைவன்
கஞ்சன்முத லோரறியாக் கர்த்தனெங்க ளிறைவன்
கண்டவெலா மோருருவாக் காட்டுமரு ளிறைவன். (௪)

ஒப்பிதுவென் றோதவொணா வொண்பொருளா மிறைவன்
உள்ளமனக் கள்ளமெலா மொழித்தருளு மிறைவன்
எப்பொழுது மம்பருட னிம்பருமுள் ளுவந்தே
எம்மிறைவ னெம்மிறைவ னென்றிறைஞ்சு மிறைவன். (௫)

அருவுருவாய்த் திருவுருவா யருளுருவா மிறைவன்
அன்பரன்றி வன்பரென்று மறிவரிதா மிறைவன்
பொருளெவைக்கு முதற்பொருளாம் போதமலி யிறைவன்
புன்மையுறு மெனையாண்ட புண்ணியவரு ளிறைவன். (௬)

காரணகா ரியமிரண்டுங் கடந்துநிற்கு மிறைவன்
கலகமலம் நீத்தெனையாள் கருணைமலி யிறைவன்
சிரணியு மாரணத்தாற் செப்பருஞ்சீ ரிறைவன்
சீவனெவைக் குங்கரியாய்த் திருநடஞ்செய் யிறைவன். (௭)

வெஞ்சமனுக் கஞ்சவுரு வீரமரு ளிறைவன்
வேதமெலா மோலமிடும் வெற்றிபுனை யிறைவன்
பஞ்சநதிச் சேத்திரத்திற் பரவியெழு மிறைவன்
பந்தம்றுத் தெந்தனையாள் பரிவுமிகு மிறைவன். (௮)

ஐம்பொறிவா யென்றன்மன மலையினுமாங் காங்கென்
னறிவினுக்கு மறிவாய்நின் றறிவுறுத்து மிறைவன்
கம்பலைசே ரங்காதி காரியங்க ளியாவுங்
கானலினீர் போற்றினநான் காணவரு ளிறைவன். (௯)

அன்னையினு மன்னருள்கொண் டாதரிக்கு மிறைவன்
ஆக்கைமயல் நீக்கியெனை யாண்டவரு ளிறைவன்
பன்னுசிவா நந்தமெனத் துன்னுபெயர் மேவிப்
பஞ்சநதிக் கண்வருமெய்ப் பரசமயத் திறைவன். (௧0)

அருளிறைப்பத்து

முற்றிற்று.

உ

சிவானந்தசுவாமிகள்

தோத்திரமாலை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடிவைத்தநின்றனருளாளர்தாளி
லடியற்றதாருவெனவே
முடிவைத்தனந்தவிதமோதிநிற்கு
முறையேதுமொன்றுமிலனாய்
மிடிவைத்தவாழ்வைநிலையென்றுநம்பும்
விழலேனுமுய்யநினைவாய்
நடிவைத்ததாளர்குழுமொய்த்தபஞ்ச
நதிமேவுமுக்கணிறையே. (௧)

இலமேவினோர்களைதந்தையென்னு
மிருண்மூடியுள்ளமலைவாய்ப்
பலமேதுமின்றியவமேதிரிந்து
பரிதாபமெய்தலிதமோ
பிலமேவுமுன்றனருளாயமோன
பிரமானுபூதியருள்வாய்
நலமேவுதொண்டரினமேவுபஞ்ச
நதிமேவுமுக்கணிறையே. (௨)

அந்தாமரைக்கணரிவேதனேன
மனமேனிகொண்டுசகமோ

டுந்தாசினிக்குநணியோடிநாடி
புணராதநின்றனுருவை
எந்தாயிவண்ணமெனவென்றெடுத்திவ்
வெளியேனிசைக்கவசமோ
நந்தாதிலங்குவளமல்குபஞ்ச
நதிமேவுமுக்கணிறையே. (௫)

பணியாயநல்குவிடையானுபூதி
பரவாதுநெஞ்சநிலையாய்த்
தணியாயஞானசுகநிஷ்டைசாரு
தரமேதுமொன்றுமுணரா
தணியாயமாயிவ்வுடன்மானமிஞ்சி
யகிலத்தழுந்தன்முறையோ
நணியாயநல்குமணிகொண்டபஞ்ச
நதிமேவுமுக்கணிறையே. (௬)

மண்ணேகுளிர்ந்தவனமோமிகுந்த
வனலோவழங்குவளியோ
விண்ணேவதீதவெளியோவசத்தில்
விழைவற்றதொண்டர்மனதின்
எண்ணேவிருக்குமிடநீயெனக்கு
மின்வயென்றிசைத்திநிசமே
நண்ணேகைநாளுநழுவாதபஞ்ச
நதிமேவுமுக்கணிறையே. (௭)

வீடாதவன்பொய்மயறம்மைநன்மை
[illegible]குமன்பர்மேவுசபையைத்

தேடாதவன்பல்நினைவற்றிடாத
சிதடன்கொடூரனசடன்
வாடாதவன்புன்மொழிகோள்சொலற்கிம்
மடனேனுமுய்யநினைவாய்
நாடாதரித்துமிகவோதுபஞ்ச
நதிமேவுமுக்கணிறையே. (௬)

கல்லோபருத்ததருவோகனத்த
வயமோகடுத்ததுயர்சேர்
இல்லோநல்வித்துமுளையாதபாலை
நிலமோவிருண்டமுகில்சார்
அல்லோதுருக்கவுணவோநின்னும
மண்தையுன்னிடார்களிதயம்
நல்லோர்வசிக்குநகரானபஞ்ச
நதிமேவுமுக்கணிறையே. (௭)

வானோதழைந்தமதியோவனற்குண்
மெழுகோர்நிவாதசுடரோ
தேனோகனிந்தகனியோமுழங்கு
திரையற்றடங்குகடலோ
ஞானோதயத்துனடியார்கருத்தி
னயமின்னுமென்னவணமே
நானோதரன்சொல்லிடநல்லபஞ்ச
நதிமேவுமுக்கணிறையே. (அ)

எழுவாயோடந்தமிலதாகியெங்கு
மிறையேனுமேதிலிலதாய்த்
தொழுவாரகங்கடனினுவியான
துணையேபுவிக்கணுணர்தங்
குழுவான்மயங்கியலையாதசிந்தை
குணமானகல்விகருணை
நழுவாதசெல்வமருள்செய்திபஞ்ச
நதிமேவுமுக்கணிறையே. (௯)

மொய்தானைமன்னர்துதிசெய்யினுஞ்சொன்
முறையின்றிநீசர்முதலோர்
வைதாலும்யாவுமொழியென்றுகாணு
மதிதந்துரக்ஷைபுரிவாய்
மைதாவுசோலைமதுவந்துபாயும்
வயல்மேவுபஞ்சநதிவாழ்
ஐதாவுமோனவடிவானநற்சி
வானந்தஞானகுருவே. (௧0)

தோத்திரமாலை

முற்றிற்று.